சுருக்கம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் – கோயம்புத்தூர் மாவட்டம், மடத்துக்குளம், சங்கராமநல்லூர், குமாரலிங்கம், கணியூர் பேரூராட்சிகள் மற்றும் டத்துக்குளம் உடுமலைப்பேட்டை, குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களைச்சேர்ந்த 112 ஊரக குடியிருப்புகளுக்கு திருமூர்த்தி அணை–தலி கால்வாயிலிருந்து குடிநீர் வழங்கும் பொருட்டு அமைக்கப்படவுள்ள கூட்டு குடிநீர் திட்டம் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை நிர்வாக ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

## *நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.1) துறை*

அரசாணை (நிலை)எண்.215 நாள்.31.10.2008

ஐப்பசி 15, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின்
கடித எண்.கோ.160407/உபொ8/திமேபி/நாள்.23.09.2008

----

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய மேலாண்மை இயக்குநர் கோயம்புத்தூர் மாவட்டத்தைச்சார்ந்த மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களைச்சேர்ந்த 112 ஊரக குடியிருப்புகளுக்கு திருமூர்த்தி அணை தலி கால்வாயிலிருந்து குடிநீர் வழங்கும்பொட்டு அமைக்கப்படவுள்ள கூட்டு குடிநீர் திட்டத்திற்கான விரிவான குடிநீர் திட்டம் ரூ.2876.40 இலட்சங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 2008–2009 ம் ஆண்டில் இத்திட்டம் செயலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்துள்ளார்.

2. இத்திட்டப்பகுதியில் உச்சக்கால (2040) மக்கட்தொகை 205519 என்றும் தேவைப்படும் குடிநீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பேரூராட்சிகளுக்கும் 40 லிட்டர் வீதம் ஊரக குடியிருப்புகளுக்கும் குழாய் இழப்பு நீர் 15 சதவீதம் மற்றும் குழாயில் குறைந்தபட்சம் 10 லிட்டர் வீதம் செல்லும்படியாக கணக்கில் கொண்டு ஒரு நாளைக்கு தேவைப்படும் குடிநீர் அளவு 13.61 மில்லியன் லிட்டர் எனவும தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அதிகாரம் அளிக்கப்பெற்ற குழு 18.09.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வாரிய பரிந்துரையை ஏற்று தனது தீர்மானம் எண்.6 நாள்.18.09.2008ல் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மடத்துக்குளம், சங்கராமநல்லூர், குமாரலிங்கம், கனியூர் பேரூராட்சிகள் மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை குடிமங்கலம் ஊராசி ஒன்றியங்களைச்சேர்ந்த 112 ஊரகக் குடியிருப்புகளுக்கு திருமூர்த்தி அணை–தலி கால்வாயிலிருந்து அமைக்கப்படவுள்ள கூட்டு குடிநீர் திட்டத்திற்கு அமைப்பு செலவு ரூ.2876.40 இலட்சங்கள் எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.93.00 இலட்சங்கள் எனவும் தனிநபர் செலவு ரூ.1824/– எனவும், 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு 9.45 என கணக்கிட்டு ஊரக குடியிருப்புகளுக்கு குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் 100% மான்யம் மற்றும் பேரூராட்சிகளுக்கு 20% மான்யம் பொதுமக்க்ளின் பங்களிப்பு மீதம் 80% குறைந்தபட்ச தேவை திட்டத்தின் கீழ் மான்யம் பெற்று கீழ்க.ட் நிதி பகுப்புடன் செயல்படுத்துவதற்கு தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக ஒப்புதல் ழுங்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

| பயனாளியின் பெயர் | நிதி பகுப்பு | | |
|---|---|---|---|
| | குறைந்தபட்ச திட்டத்தின் கீர் 80% மான்யம் | 20% பொதுமக்கள் பங்களிப்பு உள்ளாட்சி அமைப்பு பங்குத் தொகை | மொத்தம் |
| கனியூர் பேரூராட்சி | 123.04 | 30.76 | 153.80 |
| குமாரலிங்கம் பேரூராட்சி | 194.32 | 48.58 | 242.90 |
| மடத்துக்குளம் பேரூராட்சி | 538.00 | 134.50 | 672.50 |
| சங்கராம நல்லூர் பேரூராட்சி | 180.96 | 45.24 | 26.20 |
| 112 ஊரக குடியிருப்புகள் | 100% குறைந்தபட்ச தேவைத்திட்டத்தின் கீழ் மான்யம் | | 1581.00 |
| மொத்தம் | 2617.32 | 259.08 | 2876.40 |

இதன் அடிப்படையில் இத்திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய மேலாண்மை இயக்குநர், அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மடத்துக்குளம், சங்கராமநல்லூர் குமாரலிங்கம், கனியூர் பேரூராட்சிகள் மற்றும் மடத்துக்குளம் உடுமலைப்பேட்டை குடிமங்கலம் ஊராட்சி ஒன்றியங்களைச்சேர்ந்த 112 ஊரக குடியிருப்புகளுக்கு திருமூர்த்தி அணை–தலி கால்வாயிலிருந்து அமைக்கப்படவுள்ள கூட்டு குடிநீர் திட்டத்திற்கு அமைப்புச் செலவி ரூ.2876.40 இலட்சங்கள் எவும், ஆண்டு பராமரிப்பு செலவு 93.00 இலட்சங்கள் எனவும், தனிநபர் ரூ.1824 எனவும் 1000 லிட்டருக்கான குடிநீர் செலவு 9.45 எனவும் கணக்கிடப்பட்டு கீழ்கண்ட நிதி பகுப்புடன் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| பயனாளியின் பெயர் | நிதி பகுப்பு | | |
|---|---|---|---|
| | குறைந்தபட்ச திட்டத்தின் கீர் 80% மான்யம் | 20% பொதுமக்கள் பங்களிப்பு உள்ளாட்சி அமைப்பு பங்குத் தொகை | மொத்தம் |
| கனியூர் பேரூராட்சி | 123.04 | 30.76 | 153.80 |
| குமாரலிங்கம் பேரூராட்சி | 194.32 | 48.58 | 242.90 |
| மடத்துக்குளம் பேரூராட்சி | 538.00 | 134.50 | 672.50 |
| சங்கராம நல்லூர் பேரூராட்சி | 180.96 | 45.24 | 26.20 |
| 112 ஊரக குடியிருப்புகள் | 100% குறைந்தபட்ச தேவைத்திட்டத்தின் கீழ் மான்யம் | | 1581.00 |
| மொத்தம் | 2617.32 | 259.08 | 2876.40 |

/ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து
அரசு முதன்மை செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5
ஊரக வளர்ச்சி ஆணையர், பனகல் கட்டிடம், சென்னை–15
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–108
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்
சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் (ஊரக வளர்ச்சி ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் ஆணையர் மூலமாக)
நிதி (நநி(ம)குவ)துறை சென்னை–9

நகல்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்று உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்மு உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
பொது(நூலகம்)றை, சென்னை–9
நநி(ம)குவ,(அநமு2)குவ2/ குவ3/ குவ4 / வசெதுறை சென்னை–9
இகோ/உ.நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்